# தமிழ் மற்றும் தெலுங்கு கட்டிட கலைகள்

**முனைவர் பூ.சு.கணேஷ் மூர்த்தி**

உதவிப் பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,

திராவிடப்பல்கலைக்கழகம், சீனிவாசவனம்,குப்பம் 517426 ஆந்திரா.

ORCID: https:// orcid.org/ 0000 - 0003 – 3734 – 2402

மனிதனது உள்ளத்தை தன் வயமாக்கி, நிரம்பி, அளவோடு நில்லாமல் வெளிப்படுகின்ற ஆற்றல் கலை எனப்படும். கூடுதல்,குறைதல் இன்றி எப்பொருளும் அளவோடு அமைந்திருப்பின், அந்த அமைப்புக் கண்ணைக் கவருவது இயல்பு. கண்ணையும் கருத்தையும் கவரும் அந்த அமைப்புப் பாராட்டதகும் நிலையை அடைகின்றது. அப்பொருள் கலையறிவோடு அமைக்கப்பட்டதை அறியமுடிகிறது. கலை என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடங்கி நிற்பதாகும். அதே சமயத்தில் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகவும் உள்ளத்தைத் தன்பால் ஈர்க்கும் வண்ணமாகவும் விளங்குகின்றது. கலையாற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம்; கண்ணைக் கவரும் ஓவியமாக வெளிப்படலாம்; சிற்பமாக உருக்கொள்ளலாம்; கண்ணையும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் அழகிய கட்டடமாக வெளிப்படலாம்; பிறவாகவும் தோன்றி அழகிய காட்சியாகவும் இருப்பதை அறியலாம். (தமிழகக் கலைகள் பக் -1)

கலை என்பது பல பொருள் கொண்ட ஒரு சொல். கலை என்னும் சொல் செயல்திறன், ஆண்மான், ஆண்குரங்கு, சுறாமீன், மகரராசி, உடை அமிசம், சந்திரனின் பதினாறு கூறு ஒளி, சாத்திரம், நூலறிவு, மொழி, வண்ணப்பாட்டின் ஒரு பாகம், வித்தியா தத்துவம் ஏழனுள் ஒன்று மரக்கவடு, மேகலை, காஞ்சியென்னும் இடையணிகள், மரவைரம், கற்பூர வகை முதலிய பல பொருள்களில் இலக்கியஆட்சி கொண்டுள்ளது. உலக வழக்கில் இன்னும் பல பொருள்களை உணர்த்தி வருவதை அறியமுடிகிறது. இயல்பாய்த் தோன்றிய பொருளை இயற்கையாகவும் மக்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளைக் கலையாகவும் அல்லது கலைப் படைப்பாகவும் கருதலாம். கலையானது அந்தந்த காலகட்டத்தில் மக்களின் வாழ்வியல் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாறி வருவதை அறியமுடிகின்றது. கலை இன்னதுதான் என்று இலக்கண வரையறை கூறி விளக்கவியலாது. ஆனால் கலை பற்றிச் சிந்தித்துள்ள பல்வேறு அறிஞர்களும்

ஆராய்ச்சியாளர்களும் பல கோணங்களில் உணர்ந்து விளக்கம் தர முயன்றுள்ளதை அறியலாம்.

இந்தியக் கட்டிடக்கலை ஒரு கலையாகக் கருதப்படுகிறது. கலை என்பது பொருள். கலை என்பது படைப்பு, ஞானத்தின் ஒளியைப் போல முரட்டுத்தனமான வேத இலக்கியம், எல்லையற்ற இருளின் கருவறையில் மறைந்திருக்கும் பண்டைய வாஸ்து விஞ்ஞானத்தைக் காண்பதாகும். ஆதி காலத்தில் செங்கல், மரம், சுண்ணாம்பு முதலிய பொருள்களைக் கொண்டு கோயில் கட்டிடங்களை அமைத்தார்கள். (நுண்கலைகள்பக்.11) எனவே, இன்றளவும் அழியாமல் இருக்கும் புராதனக் கட்டமைப்புகள் நமது கலைச் சிறப்புக்கு சான்றாக விளங்குகின்றன. உயர்குடிமகன் தமது ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்ப அந்தந்த நோக்கங்களுடன் வழிபாடுகளும், உபாசனைகளும், அவரவர் தெய்வங்களுக்கு ஏற்ற வகையில் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. பண்டைய சதுர்வேதங்கள் மற்றும் உபநிடதங்களில், தெய்வங்கள், கோயில்கள் மற்றும் பூஜைகள் உலக இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வேதகாலத்தில் மக்கள் குகைகளில் வாழ்ந்தனர் என்று அதர்வ வேதம் கூறுகிறது.

கலைகளில் முதலாவதாகிய கட்டிடக்கலையைக் குறித்து பார்போம். வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள் முதலியவை கட்டிடங்களே. ஆனால், நாம் இங்கு ஆராயப்புகுவது கோயில் கட்டிடங்களை மட்டுமே. முதலில் கோயில் கட்டிடங்கள் நமது நாட்டில் எந்தெந்த பொருள்களால் அமைக்கப்பட்டதை அறியமுடிகிறது.

மிகப் பழைய காலத்திலே நமது நாட்டுக்கோயில் கட்டிடங்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன. அதன் பிறகு செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன.

**மரக்கோயில்கள்**

மரத்தைத் தகுந்தபடி செதுக்கிக் கட்டிடம் அமைப்பது எளிமையானது. பண்டைத் தமிழகமான இப்போதைய மலையாள நாட்டின் சில இடங்களில், இன்றும் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். சிதம்பரத்தில் சபாநாதர் மண்டபம் இப்போதும் மரத்தினாலேயே அமைக்கப்பெற்றிருக்கிறது. சிதம்பரக் கோயிலின் பழைய கட்டிடங்கள் எல்லாம் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தன. முக்கியமாக மேல் பகுதியாகிய கூரை விரைவில் பழுதடைந்தன. ஆகவே மரக்கூரைகள் பழுது படாத படி அவற்றின் மேல் செம்புத் தகடுகளை வேய்வது பண்டைக் காலத்து வழக்கம். செம்பு தகடு

வேய்ந்த கூரை விரைவில் பழுதடையாது. முற்காலத்தில் சிதம்பரம் முதலிய கோயில்களின் கூரைகளில் சில அரசர்கள் செம்புத் தகடுகளையும் பொற்றகடுகளையும் பொறித்தார்கள் என்று கூறப்படுகின்றது. அக்காலத்தில் மரத்தினால் கட்டிடம் அமைக்கப்பட்டு இருந்தபடியினால், அவை விரைவில் பழுதாகாதபடி செம்புத்தகடுகளையும் பொற்றகடுகளையும் அரசர்கள் கூரையாக வேய்ந்தார்கள். (தமிழர் வளர்த்த அழகுகலைகள் பக்.6-7)

**இளங்கோயில்**

இளங்கோயில், சிலர் இதனைப் பாலாலயம் என்று கூறுவர். பழைய கோயிலைப் புதுப்பிக்கிறபோது, கோயில் திருப்பணி முடிகிற வரையில், அக்கோயில் மூல விக்கிரகத்தை தற்காலிகமாக அமைக்கப்பட்ட சிறு கட்டிடத்தில் வைத்திருப்பார்கள். இந்த தற்காலிகமான ஆலயத்திற்கு பாலாலயம் என்பது பெயர். ஆனால் திருநாவுக்கரசு கூறுகிற இளங்கோயில் பாலாலயம் அல்ல. கோயில் கட்டிட வகைகளில் ஒன்றைத்தான் இளங்கோயில் என்று கூறுகின்றார்.

இளங்கோயில் பற்றி தேவாரத்திலும் சாசனங்களிலும் கூறப்படுகிறது. சோழநாட்டு மீயச்சூர் கோயிலை இளங்கோயில் என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார். மீயச்சூர் என்பது இப்போது பேரளம் என்று வழங்கப்படுகிறது."கடம்பூர் இளங்கோயிலும் கைலாய நாதனையே காணலாமே" என்று கூறுகிறார்.

பூதத்தாழ்வார் தமது இரண்டாம் திருவந்தாதியில் வெள்ளத்திளங் கோயிலைக் கூறுகிறார். முதலாம் இராஜராஜன் காலத்துச் சாசனம் ஒன்று கடம்பூர் இளங்கோயிலை குறிப்பிடுகிறது. திருச்சி மாவட்டம் குளித்தலை தாலுகா இரத்தினகிரி என்னும் ஊரில் உள்ள சாசனம், ஜடாவர்மன் பாண்டியன் ஆன திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவர் (கி.பி.1254 - 1264) காலத்தில் எழுதப்பட்டது. இதில், திருவாலீசுரமுடைய நாயனார், திருக்கயிலாயமுடைய நாயனார் என்னும் இரண்டு கோயில்களும் இளங்கோயில்கள் என்று கூறப்படுகின்றன.

**தெலுங்கு கட்டிடக் கலை**

கட்டிட கட்டமைப்புகள், வானிலை நிலைமைகள், நிலத்தின் விலைகள், நில நிலைமைகள், சிறப்புப் பயன்பாடுகள் மற்றும் அழகியல் காரணங்கள் ஆகியவை பலவிதமான காரணிகளில் அடங்கும். கட்டிடம் என்ற சொல் கட்டிடம் அல்லாத கட்டமைப்புகளை

ஒப்பிடுவதாகும். சுற்றுச்சூழல், பாதுகாப்பு, தங்குமிடம், தனியுரிமை, வழங்கல், சேமிப்பு, வாழ்க்கை வசதியைப் பராமரித்தல் ஆகியவற்றின் மூலம் கட்டிடங்கள் பல சமூகத் தேவைகளுக்கு சேவை செய்கின்றன.

**வடிவமைப்பு மற்றும் உருவாக்கம்**

முகம்மதுகுலிகுதுப்ஷா என்பவர் இதன் கட்டுமானத்திற்காக அடிக்கல் நாட்டினார். குதுப்ஷாவின் முதன்மை அமைச்சராய் இருந்த மிர் மொமின் அஸ்டாரபடி (Mir Momin Astarabadi) இதன் வடிவமைப்பிலும் ஐதராபாத் நகர வடிவமைப்பிலும் முக்கிய பங்காற்றினார். பெர்சியாவிலிருந்தும் கட்டிடக்கலை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். எனவே இது இந்திய இஸ்லாமிய பாணி கட்டிட வகையில் காணப்படுகிறது. சார்மிரானது துறைமுக நகரான மசூலிப்பட்டினத்தையும், கோல்கொண்டாவையும் இணைக்கும் சாலையில் கட்டப்பட்டது.

குடிமல்லம் லிங்கம் என்பது இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தின் திருப்பதி மாவட்டத்தில் உள்ள ஏர்பேடு உள்ள திருப்பதி நகருக்கு அருகிலுள்ள ஒரு சிறிய கிராமமான குடிமல்லம் பரசுராமேஸ்வர சுவாமி கோயிலில் உள்ள ஒரு பழமையான லிங்கமாகும். குடிமல்லம் ஒரு சிறிய கிராமமாக இருந்தாலும், இது நன்கு அறியப்பட்டதாகும், ஏனெனில் இது மிகவும் பழமையான லிங்க வடிவத்தை உடையது, அதன் முன்புறத்தில் சிவனின் முழு நீள உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இது பரசுராமேஸ்வரர் கோவிலின் கர்ப்பகிரகத்தில் உள்ளது, இது சிவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்து கோவிலாகும். இது இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சிவனுடன் தொடர்புடைய இரண்டாவது பழமையான லிங்கமாகும், மேலும் இது கிமு 21 ஆம் நூற்றாண்டு அல்லது கிமு 3 ஆம் நூற்றாண்டு, அல்லது மிகவும் பிற்பாடு, கிபி 2 ஆம் நூற்றாண்டு, கிபி 3, 4 ஆம் நூற்றாண்டு, அல்லது ஒரு ஆதாரத்தின்படி, கிபி 7 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை. ஹார்லின் கூற்றுப்படி, கி.பி 7 ஆம் நூற்றாண்டிலிருந்து பல்லவ வம்சத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சிற்பங்களுக்கு முன்னர் பண்டைய தென்னிந்தியாவில் இருந்து தப்பிப்பிழைத்த முக்கியத்துவமும் கொண்ட ஒரே சிற்பம் இதுவாகும். தென்னிந்தியாவின் எப்பகுதியிலும் இத்தகு உயரத்தில் அமைந்திருக்கும் லிங்க உருவத்தைக் காண இயலாது. சிவக் கடவுளின் ஆரம்பகால உருவ அமைப்பு அமைந்துள்ள சைவ திருத்தலம் என்பது அறியற்பாலதாகும். இது திருப்பதி நகருக்கு தென்கிழக்கே 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

(Elements of Indian Art P.No.71)

நெல்லூர் மாவட்டம் நெல்லூரில் உள்ள ஒரு வடமொழிச் சாசனம் எளங்கோயில் ஒன்றைக் கூறுகிறது. இளங்கோயிலைத்தான் இந்த வடமொழிச் சாசனம் எளங் கோயில் என்று கூறுகிறது.(Epi.Indi.vol.lll p.136146.) சிலர் கருதுவதுபோல் இளங்கோயில் பாலாலயமாக இருந்தால் இந்த வடமொழிச் சாசனம் வடமொழிச் சொல்லாகிய பாலாலயம் என்பதையே கூறியிருக்கும். ஆனால் இளங்கோயில் என்று கூறுகிறபடியால், இளங்கோயில் பாலாலயம் அன்று என்பதும், கோயில் அமைப்பில் ஒரு வகையானது என்றும் ஐயமறத் தெரிகிறது. (தமிழர் வளர்த்த அழகுகலைகள் பக்.21)

**முடிவுரை**

காலந்தோறும் நிலைத்து நிற்க்கும் பிரதான கட்டடங்கள் தமிழ் மற்றும் தெலுங்கு கட்டட கலைக்கு சான்றாக அமைந்துள்ளது. மக்கள் தங்களின் பக்தி உணர்வை வெளிக்காட்டும் வண்ணம் தாம் வழிபடும் தெய்வங்களுக்கு ஏற்ற வகையில் கோயில்கள் கட்டி வழிபட்டதை அறியமுடிகிறது. இன்றைய காலகட்டத்தில் தொழில் நுட்ப வளர்ச்சிகேற்ப புதிய வடிவமைப்புகளுடன் இன்றளவும் இக்கலை வளர்ந்து வருகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் மயிலை சீனி.வேங்கடசாமி
நுண் கலைகள் மயிலை சீனி.வேங்கடசாமி
கந்தையா பிள்ளை ந.சி செந்தமிழ் அகராதி
கதிரைவேற் பிள்ளை தமிழ்மொழி அகராதி

A.Goswami Indian Temples Sculpture

SP Gupta Elements of Indian Art Including Temple Architecture